எதிர்பார்ப்பில்லாமல் இருப்பாய் என்றால், உன்னுடைய தவறை எண்ணி வருந்த கூட நேரமில்லாத ஒரு காலத்தை நோக்கி நீ சென்று கொண்டிருக்கிறாய் என்பதை மறந்து விடாதே.

என் அன்பு வாலிப தம்பி, தங்கச்சி, காரணமில்லாமல், இந்த கைப்பிரதி உன்னுடைய கைகளில் வரவில்லை. இயேசு கிறிஸ்து உன்னை நேசிப்பதாலும், அவருடையவருகையில் உன்னை அழைத்து செல்ல விரும்புவதால் மாத்திரமே உன்னோடு அவர் பேசிக்கொண்டிருக்கிறார் என்பதை மறந்து விடாதே. இது வரைக்கும், உனக்கு இயேசு என்பது யார் என்று தெரியாமலிருந்திருக்கலாம். ஆனால், இன்றைக்கு அறிந்து கொள், அவரேஉன்னுடைய பாவங்களுக்காய் மரித்தவர். இது எனக்கு அவசியமில்லை என்று நீ நினைப்பாயென்றால், ஒருநாள்அவருடைய வருகையில் கைவிடப்படுவாய்.

இயேசு கிறிஸ்து 2000 வருடங்களுக்கு முன்பு பாவியாகிய உனக்காக, சிலுவையில் தொங்கி, தன் கடைசி சொட்டு இரத்தத்தையும் உனக்காக சிந்தினார். எதற்காக, நீ மீட்பு பெறுவதற்காக. இன்றே ஆண்டவரிடம் திரும்பு, மனம்திரும்பு, பரலோக இராஜ்ஜியம் சமீபித்திருக்கிறது. மரணத்திற்கு பிறகு ஒரு வாழ்கை உள்ளது என்பதை மட்டும் ஒரு போதும் மறந்து விடாதே.

இயேசு கிறிஸ்துவின் வருகையும், உலக முடிவும் அதிசீக்கிரமாய் இருக்கிறது. இயேசுவுக்கு இன்றே உன்னை ஒப்புக்கொடு, சொந்த இரட்சகராக ஏற்றுக்கொள். வருகைக்கு ஆயத்தப்படு. ஒரு கிறிஸ்தவனாகிய உன்மேல் விழுந்த கடமையும் இதுவே.

**“நீ ஆயத்தப்படு, உன்னோடு கூடின கூட்டத்தையும் ஆயத்தபடுத்து”.**

**“ஆயத்தப்படுவோம்”**

**“இந்தியர்களாகிய நாம் பரலோகத்தை நிரப்புவோம்”**

****

**For Contact**

End time Warriors

Cell: 7667995892

Email-endtimewarriors17@gmail.com

*Diocesan Offset Press, Palayamkottai. Ph : 0462 2573182*

# வருகைக்கு ஆயத்தமா

நம் அன்றாட வாழ்வில் ஒவ்வொன்றிற்கும், ஆயத்தம் என்பது மிகவும் அவசியம். வருகைக்கு ஆயத்தம் என்பது என்ன. இது ஒரு கிறிஸ்தவனுக்கு தான் அவசியமா. இந்த விஷயத்தில் ஒவ்வொரு கிறிஸ்தவனும் ஏன் ஆயத்தம் ஆக வேண்டும், எதற்காக ஆயத்தம் ஆக வேண்டும் என்பதை குறித்து இங்கே சொல்லப்படுகிறது. தாயின் கருவில் உருவாகும் முன்னமே தெரிந்து கொள்ளப்பட்டு, ஆண்டவரால் நடத்தப்பட்டு இந்த கடைசி காலத்தில் வாழ்ந்து கொண்டிருக்கும் ஒவ்வொரு வாலிபனும், ஆண்டவரின் வருகைக்கு கட்டாயம் ஆயத்தம் ஆக வேண்டும். ஏனென்றால், கிறிஸ்தவன் என்ற பெயர் மாத்திரம் வைத்து கொண்டு, ஒரு எண்ணையில்லாத கன்னிகையாய், புத்தியற்று நிற்பது கர்த்தருடைய சித்தமில்லை. கர்த்தர் வரும் போது, கரை திரை அற்ற ஒரு பரிசுத்த வாழ்க்கையை, வாழும் ஒவ்வொருவரும், அதை சந்தோஷத்தோடே எதிர் கொள்வோம்.

ஏதோ ஆயத்தம் என்பது ஒரு பள்ளிக்கு, கல்லூரிக்கு செல்லும் போது செய்கின்ற ஆயத்தம் இல்லை, மாறாக ஒரு எஜமானை சந்திக்க ஆயத்தம் ஆவது. ஒரு எஜமானை சந்திக்க ஆயத்தம் ஆவது என்பது என்ன. எஜமான் தனக்கு கொடுத்த பொறுப்பை நிறைவேற்றி, தனக்கு கொடுத்த தாலந்தை பெருக்கி அவரின் சித்தம் செய்து, அவருக்கு பிரியமாய் வாழ்ந்து, மேகங்கள் நடுவே ஆரவார தொனியோடு, எக்காள சத்தத்தோடு அவர் வரும் போது மகனே நல்ல ஓட்டத்தை ஓடினாய் என்று கரம் அசைத்து, உன்னை அணைத்து கொள்வதே உன்னைப்பற்றிய எஜமானுடைய சித்தமாயிருக்கிறது.

எந்த நேரமாயிருந்தாலும், என்ன வேலைசெய்தாலும், வருகைக்கு ஆயத்தமாயிருக்க வேண்டும் என்பது தான் உண்மை. இயேசு கிறிஸ்து வரும் போது அவர் தரும் பாவ மன்னிப்பின் நிச்சயம் பெற்று, பரிசுத்தமாய் வாழ்பவர்கள் எடுத்துக்கொள்ளபடுவார்கள். யுக யுகமாய் கர்த்தரோடு நித்தியத்திலே உன் வாழ்க்கையை வாழ இப்பூமியிலே சில மாம்சீக மற்றும் உலக காரியங்களைவிட்டு விலகினவனாக, விலகினவளாகத்தான் இருக்க வேண்டும். அப்படியானால், ஆண்டவரை அறியாதவர்களின் நிலை என்ன. குறிப்பாக, அநேக நேரங்களில் ஒரு காரியத்தின் தன்மை, அல்லது விளைவு, அந்த காரியத்தின் ஆரம்பத்தை பார்க்கிலும், அந்த காரியம் முடிந்த பிறகு தான் அதிகமாக தெரியும். ஒருவேளை, இயேசுவின் வருகையை குறித்து, ஒரு